Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 22.05.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 22.05.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

இந்தியாவும் – சைப்ரசும், தீவிரவாத எதிர்ப்பு, தொழில்நுட்பம், உயர் கல்வி மற்றும் கலாச்சாரத் துறையில் ஒத்துழைக்க, பல்வேறு உடன்பாடுகளை எட்டியுள்ளன.

பல்வேறு அரசுத் துறைகளில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 51 ஆயிரம் பேருக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை ரோஜ்கார் மேளாவில், நியமனக் கடிதங்களை வழங்குகிறார்.

எல்லைப் பகுதிகளில், நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையில், பாதுகாப்பை வலுப்படுத்த, ஸ்மார்ட் பார்டர் திட்டம் தொடங்கப்படும் என, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், ITI தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயில விரும்புவோர், இணைய தளம் மூலம், இலவசமாக விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

*மோடி சைப்ரஸ் -1 (11)*

இந்தியாவும் – சைப்ரசும், தீவிரவாத எதிர்ப்பு, தொழில்நுட்பம்- புதுமையாக்கம், உயர் கல்வி – ஆராய்ச்சி மற்றும் கலாச்சாரத் துறையில் ஒத்துழைக்க பல்வேறு உடன்பாடுகளை இறுதி செய்துள்ளன. பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, புதுடெல்லியில், சைப்ரஸ் அதிபர் திரு. நிக்கோஸ் கிறிஸ்டோ டூடிலஸ்- உடன், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். பரஸ்பர அக்கறை உள்ள பல்வேறு பிராந்திய மற்றும உலகப் பிரச்சனைகள் குறித்தும் இரு தலைவர்களும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். இந்தியாவின் சைப்ரஸ் முதலீடுகள் கடந்த 10 ஆண்டுகளில் இரண்டு மடங்காக அதிகரித்து இருப்பதாக, பின்னர் இரு தலைவர்களும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார். இது குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

*மோடி சைப்ரஸ் -2 (16)*

**(வாய்ஸ்)**

<u>இந்தியாவிற்கும் - ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான வரியில்லா ஒப்பந்தம் காரணமாக, இந்தியா – சைப்ரஸ் இடையே நம்பிக்கை அதிகரித்து, பல்வேறு புதிய வாய்ப்புகளும் உருவாகி</u>

இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். சர்வதேச அமைப்புகளில் உடனடி சீர்திருத்தங்கள் அவசியம் என்பதில், இரு நாடுகளும் ஒத்த கருத்து கொண்டுள்ளதாக, அவர் தெரிவித்தார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சைப்ரஸ் பயணத்தைத் தொடர்ந்து, இந்தியா – சைப்ரஸ் கூட்டாண்மை உறவுகள், உறுதியான முறையில், விரைந்து மேம்பட்டுள்ளதாக, சைப்ரஸ் அதிபர், கூட்டறிக்கையில் கூறினார். முன்னதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சைப்ரஸ் அதிபரை சந்தித்துப் பேசினார். 4 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள சைப்ரஸ் அதிபர் திரு. கிறிஸ்டோ டூடிலஸ், இன்று மாலை, புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி. திருவுபதி முர்முவை சந்திக்கிறார். இந்தியாவிற்கும் சைப்ரஸ் நாட்டிற்கும் இடையிலான தூதரக உறவுகள் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம், 65 ஆண்டுகளை எட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

***மோடி – ரோஜ்கார் (15)***

புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ள 19ஆவது ரோஜ்கார் மேளாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பல்வேறு அரசுத் துறைகளில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 51 ஆயிரம் பேருக்கு, காணொளிக் காட்சி மூலம், நியமனக் கடிதங்களை வழங்குகிறார். நாளைய தினம் நாட்டில் 47 இடங்களில் நடைபெற உள்ள ரோஜ்கார் மேளாக்களில்,

பல்வேறு மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்டு, நியமனக் கடிதங்களை வழங்க உள்ளனர். நாளைய தினம் நியமனக் கடிதம் பெறுவோர், ரயில்வே, சுகாதாரம் உள்ளிட்ட மத்திய அமைச்சகங்கள் மற்றும் நிதி சேவை, உயர் கல்வி உள்ளிட்ட மத்திய துறைகளில், பணியில் சேர உள்ளனர். நாட்டில் வேலை வாய்ப்புகளை பெருக்க முன்னுரிமை அளிப்பதான, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை நிஜமாக்குவதில், ரோஜ்கார் மேளாக்கள் முக்கிய இடம் வகிப்பதும், நாடு முழுவதும் இதுவரை நடைபெற்ற 18 ரோஜ்கார் மேளாக்களில், சுமார் 12 லட்சம் பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

*குவாட் (14)*

இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையிலான, QUAD கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு, வரும் 26ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இந்தோ- பசிபிக் பிராந்தியத்தை, சுதந்திரமான திறந்தநிலைப் பகுதியாக பராமரிப்பது குறித்து, கடந்த ஆண்டு ஜூலை மாதம் வாஷிங்டன்னில் இடம் பெற்ற விவாதங்களைத் தொடர்ந்து, முன்னெடுத்துச் செல்லும் வகையில் இம்மாநாடு அமையும் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. குவாட் நாடுகளுக்கு இடையில், முன்னுரிமைத் துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்வது குறித்தும், பரஸ்பர அக்கறை உள்ள பிராந்திய

மற்றும் சர்வதேச பிரச்சனைகள் குறித்தும், இம்மாநாட்டில் விவாதிக்கப்படும். ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர்கள் தங்களின் புதுடெல்லி பயணத்தின்போது, பிரதமர் திரு. நரேந்திர மோடியையும் சந்திக்க உள்ளனர்.

*ரயில்வே (11)*

2 நாள் பயணமாக ராஜஸ்தான் சென்றுள்ள ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், 20 பெட்டிகள் கொண்ட ஜோத்பூர் – டெல்லி கண்டோன்மென்ட், வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை கொடியசைத்து தொடக்கி வைத்தார். இந்த ரயில் இதுவரை, 8 பெட்டிகளுடன் இயக்கப்பட்டு வந்தது. ஜெய்சல்மேரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள, ரயில்பெட்டி பராமரிப்பு வளாகத்தையும் ரயில்வே அமைச்சர் மெய்நிகர் முறையில் திறந்து வைத்தார். அவர் இன்று மாலை ஜலோர் ரயில் நிலையத்தில் நடைபெறும் விழாவில், புதிய பூஜ் – பரேலி எக்ஸ்பிரஸ் ரயிலை கொடியசைத்து தொடக்கி வைக்கிறார். ஜெய்ப்பூரில் நாளை நடைபெற உள்ள ரோஜ்கார் மேளாவிலும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கலந்து கொள்கிறார்.

*பல்லுயிர்ச் சூழல் (9)*

உலக அளவில் **பல்லுயிர்ச் சூழல்** பாதிக்கப்படும் போக்கை தடுக்க, மக்கள் ஒவ்வொருவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மத்திய சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் கூறியுள்ளார். **உள்ளூர் செயல்பாடுகள் மூலம் உலகத் தாக்கம்** என்ற கருப்பொருள் அடிப்படையில் இன்று, **சர்வதேச பல்லுயிர்ச் சூழல் பாதுகாப்பு தினம்** கடைபிடிக்கப் படுவதை, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். நீடித்த வளர்ச்சிக்கு எதிரான பல்வேறு சவால்களுக்கு ஒரே பதில், **வளமான பல்லுயிர்ச் சூழல்தான்** என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

*அமித் ஷா -1 (7)*

எல்லைப் பகுதிகளில், ட்ரோன்கள், ரேடார்கள், கேமராக்கள் மற்றும் இதர தொழில்நுட்பங்களின் அடிப்படையில், பாதுகாப்பை வலுப்படுத்த, **ஸ்மார்ட் பார்டர் திட்டம்** தொடங்கப்படும் என, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். எல்லைப் பாதுகாப்புப் படையில், சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு விருது வழங்க, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற விழாவில் பேசுகையில், அவர் இதைத் தெரிவித்தார். உள்துறை அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்...

**(வாய்ஸ்)**

*அமித் ஷா -2 (13)*

(வாய்ஸ்)

எல்லைப் பகுதிகளில் ஊடுருவல், ஆயுதக் கடத்தல், போதை கடத்தல், கள்ள நோட்டு புழக்கம் போன்ற பிரச்சனைகளால், பாதுகாப்பு நிலவரங்களில் ஏற்படும் பல்வேறு சவால்களுக்கு இடையிலும், எல்லைகளை வலுவாக பராமரித்து வரும் எல்லைப் பாதுகாப்புப் படையினரின் சேவைகள் குறித்து நாடே பெருமிதம் அடைவதாக மத்திய உள்துறை அமைச்சர் கூறினார். எல்லைகளின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த மத்திய ஆயுதப் படையினர், மாநில காவல்துறையினர், உள்ளூர் நிர்வாகத்தினர், மற்றும், புலனாய்வு அமைப்புகளுக்கு இடையே கூடுதல் ஒருங்கிணைப்பு தேவை என்றும் அவர் வலியுறுத்தினார்.

1965 ஆம் ஆண்டு 25 படைப் பிரிவுகளுடன் தொடக்கப்பட்ட எல்லைப் பாதுகாப்புப் படை, தற்போது உலகின் மிகப்பெரிய எல்லைக் காவல் சக்தியாக மேம்பட்டு இருப்பதும், எல்லைக் காவல் படையில், சுமார் 2 லட்சத்து 70 ஆயிரம் பேர் பணி புரிந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

*இடைத் தேர்தல் (13)*

தமிழகத்தில், அஇஅதிமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. வி. சண்முகம், மாநில சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டதால் காலியான

மாநிலங்களவை இடத்திற்கு, அடுத்த மாதம் 18ஆம் தேதி, இடைத் தேர்தல் அறிவிக்கப் பட்டுள்ளது. அன்றைய தினம் மகாராஷ்டிரா மாநிலத்திலும், ஒரு மாநிலங்களவை இடத்திற்கு இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. ஆந்திரப்பிரதேஷ், குஜராத், கர்நாடகா, ராஜஸ்தான் உள்ளிட்ட 10 மாநிலங்களில் இருந்து, மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட, 24 பேர், அடுத்த மாதம் ஓய்வு பெறுவதால் காலியாகும் 24 மாநிலங்களவை இடங்களுக்கும், ஜூன் 18ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என, தேர்தல் ஆணையம் இன்று அறிவித்துள்ளது. அடுத்த மாதம் ஓய்வு பெறும் மாநிலங்களவை உறுப்பினர்களில், முன்னாள் பிரதமர் திரு. தேவகவுடா, மத்திய அமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் உள்ளிட்டோர் அடங்குவர்.

***CBSE (9)***

ஜூலை 1 முதல் CBSE 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மும்மொழி கொள்கையை கட்டாயமாக்குவதான, மத்திய இடைநிலை கல்வி வாரியத்தின் கொள்கையை ஆட்சேபிக்கும் மனு ஒன்றை, அடுத்த வாரம் விசாரிக்க, உச்சநீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது. மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சார்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, மூத்த வழக்கறிஞர் திரு. முகுல் ரோஹத்கி, இன்று, தலைமை நீதிபதி திரு. சூரியகாந்த் தலைமையிலான அமர்விடம் தெரிவித்த

போது, தலைமை நீதிபதி அடுத்த வாரம் மனுவை விசாரிக்க ஒப்புக் கொண்டார்.

***தொழில் பயிற்சி (15)***

புதுச்சேரியில், அனைத்து 4 பிராந்தியங்களில் உள்ள ITI தொழிற்பயிற்சி நிலையங்களில், அரசு உதவித் தொகையுடன், எலக்ட்ரீஷியன், மோட்டார் மெக்கானிக், ஏசி மெக்கானிக், தையல் கலை, அழகுக் கலை உள்ளிட்ட பல்வேறு தொழில்பயிற்சி பிரிவுகளில் சேர்ந்து பயில விரும்புவோர், ஜுன் 22ஆம் தேதி வரை, தொழிலாளர் துறையின் அதிகாரப் பூர்வ இணையதளம், அல்லது சென்டாக் இணைய தளம் மூலம் இலவசமாக விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், அதற்குரிய பயிற்சி பிரிவுகளுக்கும், 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் அதற்குரிய பயிற்சி பிரிவுகளுக்கும் விண்ணப்பிக்கலாம். அரசுத் தொழில்பயிற்சி நிலையங்களில், இதற்கென அமைக்கப் பட்டுள்ள உதவி மையங்கள் மூலமாகவும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். பயிற்சி முடிக்கும் அனைவருக்கும் 100 சதவிகித **வேலைவாய்ப்பு உத்தரவாதம்** அளிக்கப்படுவதாகவும், தொழிலாளர் துறை, செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

*வானிலை (13)*

வளிமண்டல சுழற்சி மற்றும் காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக, தமிழகத்திலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும், வரும் 28ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்று, தமிழகத்தின் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோர பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என வலியுறுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, ஒசூரில், 7.5 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

*ஐபிஎல் (4)*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, ஹைதராபாத்தில் நடைபெறும் போட்டியில், பெங்களூரு - ஹைதராபாத் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு அஹமதாபாத்தில் நடைபெற்ற

போட்டியில், குஜராத் அணி, 89 ரன் வித்தியாசத்தில், சென்னை அணியை தோற்கடித்தது.

***சந்திரயான் (8)***

நிலவுக்கான இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலத் திட்டத்திற்கு அமெரிக்க வானூர்தி மற்றும் விண்கலப் பொறியியல் கழகத்தின் கோடார்டு ஆஸ்ட்ரோநாடிக்ஸ் விருது வழங்கப்பட்டுள்ளது குறித்து, மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். சந்திரயான்-3 விண்கலத் திட்டத்தினால், இந்தியாவிற்கு தொடர்ந்து பெருமை கிடைத்து வருவதற்கு இதுவே சான்றாகும் என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார்.

***மருந்து (10)***

நாள்பட்ட வலி மற்றும் நரம்புக் கோளாறுகளுக்கு மருந்தாகப் பயன்படும் Pre-Gabalin மாத்திரைகள், இளைஞர்களால் போதை உணர்வுக்காக துஷ்ப்பிரயோகம் செய்யப்படுவதை தடுக்கும் வகையில், மத்திய சுகாதார அமைச்சகம் இம்மருந்தை, டாக்டர்களின் பரிந்துரைப்படி மட்டுமே விற்கத் தகுந்த மருந்துகளுக்கான ஷெட்யூல் – H1 பட்டியலுக்கு மாற்றி உள்ளது. முறையற்ற விற்பனைக்காக சட்டவிரோத கையிருப்பில் வைக்கப்பட்டு இருந்த Pre-Gabalin மாத்திரைகள், பறிமுதல்

செய்யப்பட்டதாக, அண்மையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து தகவல் கிடைத்து இருப்பதாகவும், அமைச்சகம் தெரிவித்துள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

இந்தியாவும் – சைப்ரசும், தீவிரவாத எதிர்ப்பு, தொழில்நுட்பம், உயர் கல்வி மற்றும் கலாச்சாரத் துறையில் ஒத்துழைக்க, பல்வேறு உடன்பாடுகளை எட்டியுள்ளன.

பல்வேறு அரசுத் துறைகளில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 51 ஆயிரம் பேருக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை ரோஜ்கார் மேளாவில், நியமனக் கடிதங்களை வழங்குகிறார்.

எல்லைப் பகுதிகளில், நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையில், பாதுகாப்பை வலுப்படுத்த, ஸ்மார்ட் பார்டர் திட்டம் தொடங்கப்படும் என, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், ITI தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயில விரும்புவோர், இணைய தளம் மூலம், இலவசமாக விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / SM / RK